..க்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
11.07.2026 சனிக்கிழமை
இதழ் : 186
பக்கங்கள் : 08

# நீர்கொழும்புச் சிறை வன்முறைக்கு சுயாதீனமான விசாரணை அவசியம்!

**ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் வலியுறுத்து**



*ஜெனீவா, ஜூலை. 11*


இலங்கையின் நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த வாரம் இடம்பெற்ற உயிரிழப்புகளை ஏற்படுத்திய வன்முறையும், பிற சிறைச்சாலைகளில் கைதிகள் மீது சிறை அதிகாரிகள் பழிவாங்கும் வகையில் நடந்துகொண்டதாக வெளியாகியுள்ள தகவல்களும் மிகுந்த கவலையளிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த வன்முறையில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த கைதிகள், சிறை அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரின் குடும்பங்களும் உண்மையை அறியவும், பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படவும் உரிமை பெற்றுள்ளனர் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் ரவினா ஷாம்தாசனி விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம், இலங்கையின் தடுப்புக்காவல் முறையில் நீண்டகால முன்விசாரணைக் காவல், சிறைச்சாலைகளின் அதிக நெரிசல், போதிய வசதியின்மை போன்ற

03



## காணிகளை விடுவிக்குமாறு கோரி மயிலிட்டியில் நேற்றும் போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஜூலை. 11*

மயிலிட்டி மற்றும் பலாலி பகுதிகளில் உள்ள 2,200 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி அப்பகுதி மக்கள் 12ஆவது வாரமாக நேற்று அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலிட்டி இராணுவ அதிகாரிகள் பங்களா முன்பாக நேற்று காலை 9 மணியளவில் போராட்டம் ஆரம்பமானது.

12வது வாரமாக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில், மயிலிட்டி பகுதியில் உள்ள தனியார் காணிகள், 21 இந்து மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள், விவசாய நிலங்கள் ஆகியவை

03

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சஜித்துக்கு அழைப்பாணை!

*கொழும்பு, ஜூலை. 11*

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு இலஞ்சம் அல்லது ஊழல், மோசடிகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் அழைப்பாணை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பாக ஒரு வாக்குமூலத்தைப் பெறுவதற்காக அவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த மாதம் 27ஆம் திகதி

03

## நல்லூர் திருவிழாவுக்காக விசேட ரயில் சேவைகள்!

**அமைச்சர் பிமல் பணிப்புரை**

*கொழும்பு, ஜூலை. 11*

எதிர்வரும் நல்லூர் திருவிழாக் காலத்தைக் கருத்திற்கொண்டு விசேட ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூலக்கேள்வி நேரத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

03

## உலகளாவிய எரிசக்தி தட்டுப்பாடு நீடிக்கும்!

**சர்வதேச எரிசக்தி முகவரகம் எச்சரிக்கை**

*நியூயோர்க், ஜூலை. 11*

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே மீண்டும் தொடங்கியுள்ள நேரடி இராணுவ மோதல்கள், உலகளாவிய எரிசக்தி நெருக்கடியை மேலும் நீட்டிக்கச் செய்யும் என்று சர்வதேச எரிசக்தி முகவரகம் எச்சரித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக உலகளாவிய மசகு எண்ணெய் சந்தை

03

## நீர்கொழும்பு சிறைச்சாலைக் கலவரம் 14 பேர் துப்பாக்கிச் சூட்டினால் மரணம்!

**பிரேத பரிசோதனையில் உறுதி**

*கொழும்பு, ஜூலை. 11*

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைகளின்போது கொல்லப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகளின் மரணங்கள் தொடர்பான பிரேத பரிசோதனைகளில், அவர்கள் கொடூரமான முறையில் உடல் ரீதியான தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனை அறிக்கைகளின்படி, பலத்த ஆயுதங்களால் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட கடுமையான தலைக்காயங்கள் காரணமாகவே இந்த அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

03

### மோதல் சம்பவங்கள் குறித்து

## சிறைச்சாலை அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெறுகிறது சி.ஐ.டி.

*கொழும்பு, ஜூலை. 11*

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நடந்த மோதல் குறித்த விசாரணையை குற்றப்புலனாய்வு பிரிவு ஆரம்பித்துள்ளது.

குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் குழு, சிறை வளாகத்தில் மோதல் நடந்த இடங்கள், சேதம் ஏற்பட்ட இடங்களில் ஆய்வு மேற்கொண்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கைதிகளிடம் குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள்

03

## துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரிக்கு அச்சுறுத்தல்!

*கொழும்பு, ஜூலை. 11*

நீர்கொழும்பு சிறையின் பிரதான கதவில் இருந்து கைதிகளை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்திய சிறை அதிகாரி குறித்து பலத்த சர்ச்சை எழுந்துள்ளது.

03

## நீதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

*கொழும்பு, ஜூலை. 11*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்ததையடுத்து, பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டோர் கையெழுத்திட்டனர்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கைதிகள் உயிரிழந்தமை தொடர்பாக தனது கடமைகளையும் பொறுப்புகளையும் அமைச்சர் நிறைவேற்றத் தவறியதாக எதிர்க்கட்சி

03

## வடக்கில் இராணுவத்தை குறைத்தால் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கலாம்!

**சபையில் கஜேந்திரகுமார் யோசனை**



*கொழும்பு, ஜூலை. 11*

வடக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைத்து, பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தால் அங்கு சுற்றுலாத்துறையை ஊக்குவித்து, பொருளாதார நிலைகளையும் அபிவிருத்தி செய்ய முடியும் என

03

## மகசின் சிறைச்சாலையில் மோதல் இரு கைதிகள் வைத்தியசாலையில்!

*கொழும்பு, ஜூலை. 11*

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் 5 பேர் காயமடைந்துள்ள நிலையில் அவர்களில் இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்

இச்சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2.5 மில்லியன் டொலர் விவகாரம் ஒரு சைபர் குற்ற மோசடியாகும்!

## அரச நிதிக் குழு பாராளுமன்றத்துக்கு அறிக்கை

கொழும்பு, ஜூலை. 11

திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மூன்றாம் தரப்பினருக்கு மாற்றப்பட்ட சம்பவம், ஒரு சைபர் குற்றத்துடன் தொடர்புடைய மோசடி என அறிக்கையிடப்பட்டுள்ளது.

திறைசேரியிலிருந்து மூன்றாம் தரப்பு ஒன்றுக்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மாற்றப்பட்ட சம்பவம் தொடர்பான, அரச நிதி பற்றிய குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

அரச நிதி பற்றிய பாராளுமன்ற குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது, திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மூன்றாம் தரப்பினருக்கு மாற்றப்பட்ட சம்பவம், ஒரு சைபர் குற்றத்துடன் தொடர்புடைய மோசடி என அரச நிதி பற்றிய குழு கண்டறிந்துள்ள



தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த அறிக்கையில், ஒட்டுமொத்த வெளிநாட்டு கடன் மீள் செலுத்தல் செயல்முறை குறித்து, தேசிய கணக்காய்வு அலுவலகம் உடனடியாக கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ளவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட் டுள்ளதாகவும் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

அத்துடன், இந்த மோசடி விவகாரத்தில் குற்றவியல் சட்டத்தின் கீழ் தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது சட்ட மாஅதிபரின் பொறுப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைய, துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம், ஹர்ஷ டி சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே, குறித்த அறிக்கை தொடர்பில் எதிர்வரும் வாரம் இரண்டு நாட்கள் நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படவேண்டும் என எதிர்க் கட்சியின் பிரதம அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க கோரிக்கை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இந்த கோரிக்கை தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவித்தார். ஒட்டுமொத்த வெளிநாட்டு கடன் மீள் செலுத்தல் செயல்முறை குறித்தும் தேசிய கணக்காய்வு அலுவலகம் உடனடியாக கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் பஸ் வி



திருமலை, ஜூலை. 11

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜபல் நகர் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில், சாரதி உட்பட நால்வர் காயமடைந்து மூதூர் தள வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ், பாதையை விட்டு விலகி வீடு ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பஸ் கதிர்காமத்துக்கு யாத்திரிகர்களை அழைத்துச் சென்று, அவர்களை இறக்கிவிட்டு திருகோணமலை நோக்கி திரும்பி வந்தபோது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கமே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்தில் பஸ்ஸின் சாரதி உட்பட நால்வர் காயமடைந்த நிலையில், அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மூதூர் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பஸ் மோதியதில் வீடு மற்றும் அதிலிருந்த பல்வேறு உபகரணங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன. எனினும், அந்த நேரத்தில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் காயம் ஏற்படாமல் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். (அ)

## நீர்கொழும்புச் சிறையில் மாயமான துப்பாக்கி மீட்பு!

கொழும்பு, ஜூலை. 11

நீர்கொழும்பு சிறையில் அண்மையில் நடந்த மோதலைத் தொடர்ந்து காணாமற்போன துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

விரிவான தேடுதலுக்குப் பின்னர் சிறை வளாகத்துக்குள் குறித்த துப்பாக்கி கண்டுபிடிக் கப்பட்டதாக திணைக்களம் கூறியுள்ளது.

ஜூலை 6 ஆம் திகதி சிறைச்சாலையில் நடந்த மோதலைத் தொடர்ந்து இந்த ஆயுதம் காணாமற்போயிருந்தது.

இதற்கிடையில், கண்டியில் உள்ள பழைய போகம்பரை சிறை வளாகத்தில் கைதிகளுக்கு இடமளிக்க எதிர்வரும் நாள்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலைகள் அமைப்பில் உள்ள நெரிசலைக் குறைக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் ஒரு புதிய சிறையை நிறுவுவதற்காக ஒரு சிறப்பு வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# நீதியரசர்களின் ஓய்வு வயது உயர்வு ஜனநாயகத்துக்குப் பெரும் பாதிப்பு!

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 11

உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு வயதை உயர்த்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சி, நாட்டின் ஜனநாயகத்துக்கும் நீதித்துறையின் சுதந்திரத்துக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரித்துள்ளார்.

இந்தத் திருத்தம் அரசியல் நோக்கத்திற்காகவே கொண்டு வரப்படுவதாகவும், நீதியரசர்கள் அல்லது சட்டத்தரணிகள் சங்கம் இதனை கோரவில்லை என்றும் அவர் கூறினார்.

நீதியரசர்களின் ஓய்வு வயதை உயர்த்துவது பதவி உயர்வு வாய்ப்புகளை பாதிப்பதுடன், நீதித்துறையின் சுயாதீனத்தையும் பொதுமக்களின் நம்பிக்கையையும் சீர்குலைக்கும் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மேலும், இந்தத் திருத்தத்துக்கு எதிராக மக்களை விழிப்புணர்வூட்டுவதோடு, சர்வதேச அமைப்புகளின் கவனத்திற்கும் இந்த விவகாரம் கொண்டு செல்லப்படும் எனவும் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (அ)

# நல்லை ஆதீனத்தில் இன்று புராண படனக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை. 11

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் நடத்தும் புராண படன கருத்தரங்கும், ஆசிரியர்களுக்கான கற்பித்தல் நுட்ப விரிவுரைகளும் இன்று சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆசியுரையினைச் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவசிறீ சோ. கேதீஸ் வரக்குருக்கள் வழங்கவுள்ளார்.

வளவாளர்களாகத் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் செ.கந்தசத்தியதாசன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவஞான வித்தகி திருமதி மா. அனந்தலெச்சுமி ஆகியோர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (அ)

# 11 வருடங்களில் 3ஆயிரத்துக்கும் அதிகமான தொல்பொருள்கள் சார்ந்த குற்றங்கள் பதிவு

கொழும்பு, ஜூலை. 11

இலங்கையில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான 11 வருட காலப்பகுதிக்குள், மூவாயிரத்திற்கும் அதிகமான தொல்பொருள் சார்ந்த குற்றங்கள் பதிவாகியுள்ளதாகத் தொல்பொருள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட விசேட கோரிக்கைக்கு இணங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோக பூர்வ புள்ளிவிவரங்களின்படி, இக்காலப்பகுதிக்குள் ஐந்து 510 தொல்பொருள் சின்னங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதுடன், 203 பழங்காலப் பொருள்கள் திருடப்பட்டு,2,360 சட்டவிரோத அகழ்வாராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

இந்தத் தரவுகளின்படி, கடந்த 2023ஆம் ஆண்டிலேயே வரலாற்று உச்சமாக 121 கலைப்பொருள் அழிப்புகளும், முப்பத்தியேழு சட்டவிரோத அகழ்வுகளும் பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும், இக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகத் திணைக்களத்தினால் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வழக்கு விவரங்கள், கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களின் எண்ணிக்கை, மீட்கப்பட்ட தொல்பொருள்கள் மற்றும் இவற்றைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்திகள் குறித்த எவ்வித மேலதிக விவரங்களையும் வழங்குவதற்குத் தொல்பொருள் திணைக்களம் மறுத்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# கொழும்பிலிருந்து யாழ். வந்த ரயில் உணவகத்தில் அதிக விலைக்கு தண்ணீர் போத்தல்கள் விற்பனை!

கொழும்பு, ஜூலை. 11

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த அதிவேக ரயிலின் உணவகத்தினுள், நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு குடிதண்ணீர் போத்தல்களை விற்பனை செய்த மோசடி ஒன்றை நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது, ரூ. 120.00 என குறிக்கப்பட்டிருந்த குடிதண்ணீர் போத்தல் ஒன்று 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு நுகர்வோர் சுரண்டப்பட்டமை கண்டறியப்பட்டதுடன், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ரயில் உணவகங்களில் இவ்வாறு அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்து நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் ரயில்வே திணைக்களத்துக்கும் எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.07.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அரச்சுனாவும் பாராளுமன்றமும்

இலங்கை பாராளுமன்றத்தின் வரலாற்றில் சபைக்குள் ஒரு உறுப்பினருக்கு அருகாக அமருவதற்கு விரும்பவில்லை என்று இன்னொரு உறுப்பினர் சபாநாயகரிடம் முறையிட்டு தனது ஆசனத்தை மாற்றிக் கொண்ட ஒரு சம்பவம் குறித்து நேற்றுவரை நாம் அறிந்ததில்லை.

பாராளுமன்ற ஆசன வரிசையில் தனது ஆசனத்தை மாற்றுமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்த கோரிக்கையை தொடர்ந்து நேற்றைய தினம் அவரின் ஆசனம் மாற்றப்பட்டிருக்கிறது.

இதுவரை காலமும் அவர் யாழ்ப்பாண மாவட்ட சுயேச்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் சர்ச்சைக்குரிய அர்ச்சுனா இராமநாதனுக்கு அருகாகவே அமர்ந்திருந்தார்.

சபைக்குள் தனக்கு இடதுபுறத்தில் அமர்ந்திருக்கும் அர்ச்சுனா பொது வெளியிலும் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களிலும் சமூக ஊடகங்களிலும் தன்னைத் தொடர்ந்து அவதூறாகப் பேசி மிரட்டல் விடுத்து வருவதாக கஜேந்திரகுமார் சபாநாயகரிடம் எழுத்து மூலம் முறையிட்டிருந்தார்.

இழிவான சொற்களைப் பயன்படுத்திவரும் அர்ச்சுனாவின் நடத்தைகள் அண்மைக் காலமாக மோசமடைந்திருப்பதால் அவர் சபைக்குள் தனக்கு அருகில் அமர்ந்திருப்பது தனது கவனத்தை சிதறடிப்பதால் அவருக்கு அருகில் இனிமேலும் இருப்பது சாத்தியமில்லை என்றும் கஜேந்திரகுமார் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

“முற்றிலும் நியாயமான” கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் உடனடியாகவே கஜேந்திரகுமாரின் ஆசனத்தை எதிர்க்கட்சி முன்வரிசையில் வேறு ஒரு இடத்துக்கு மாற்றியிருக்கிறார். அர்ச்சுனா பழைய அதே ஆசனத்திலேயே தொடர்ந்தும் இருக்கிறார்.

சில வாரங்களுக்கு முன்னர் அர்ச்சுனா தனக்கு பக்கத்தில் உள்ள ஆசனத்தில் இருந்து கஜேந்திரகுமாரை வேறு ஆசனத்துக்கு மாற்றுமாறு கேட்டிருந்த போதிலும், சபாநாயகர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றத்தின் கண்ணியத்துக்கு ஒவ்வாத வார்த்தைகளை மாத்திரமல்ல, தன்னைத் தெரிவுசெய்த யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் பிரிவினரின் “நிதானபுத்தி” குறித்து சமூகத்தில் சந்தேகத்தைக் கிளப்பக்கூடிய “அநாகரிகமான வார்த்தைகளையும் தனது உரையில் பயன்படுத்திவரும் அர்ச்சுனாவுக்கு அருகில் கஜேந்திரகுமார் சுமார் இருபது மாதங்களாக எவ்வாறு பொறுமையுடன் இருந்தாரோ தெரியவில்லை.

கடந்த மாதம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் கஜேந்திரகுமாருடன் ஏற்பட்ட வாக்கு வாதத்தின்போது. “தூக்கியடிப்பண்டா, தூக்கியடிபண்டா” என்று அச்சுறுத்தினார். அது பொதுவெளியில் கடுமையான கண்டனத்துக்கு உள்ளானது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் கூட்டங்களிலும் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் அர்ச்சுனாவின் அடாவடித்தனங்கள் ஏன் பொறுத்துக் கொள்ளப்படுகின்ற என்ற கேள்வியும் பலமாக எழுந்தது.

ஆனால், எவரது பெயரையும் குறிப்பிடாமல் அர்ச்சுனா அண்மையில் பாராளுமன்றத்தில் “தூக்கியடித்தோ தூக்கியடிக்காமலோ” தான் சில காரியங்களை நிறை வேற்றப் போவதாககூறினார். ஆனால், சபையில் எவ்வாறு அத்தகைய கண்ணியமற்ற வார்த்தைகள் அனுமதிக்கப்படுகின்றன என்பதுதான் புரியவில்லை. அவரைப் பேசவிட்டு ரசித்துக் கொண்டிருக்கிறார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.


அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு கத்துவது, இடைக்கிடை அழுவது, சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பது, ஆத்திரமூட்டும் பேச்சுக்களை நிகழ்த்துவது, ஆபாச வார்த்தைகளை பயன்படுத்துவது அர்ச்சுனாவின் பாணியாக இருந்து வருகிறது.


சமூக ஊடகங்களில் வைரலாகும் தருணங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே அவர் அவ்வாறு செய்கிறார். அவரைப் பொறுத்தவரை, எதிர்மறையானதோ அல்லது நேர்மறையானதோ விளப்பரம் எவ்வாறு வந்தாலும் மகிழ்ச்சியே.

சமூக ஊடகங்கள் மூலமாக அர்ச்சுனாவின் பாராளுமன்ற உரைகளையும் கேலிக்கூத்துக்களையும் பார்ப்பவர்களில் ஒரு பிரிவினர் செய்யும் பதிவுகளை நோக்கும் போது அவர் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு சவால் விடுப்பவராகவும் அந்த கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிளப்பத் தயங்குகிற பிரச்சினைகளை எல்லாம் துணிச்சலுடன் கிளப்புவராகவும் அவரை அடையாளம் காண்கிறார்கள் போன்று தெரிகிறது. இது ஆபத்தானது. அர்ச்சுனா மாற்று அல்ல. மாற்றப்பட வேண்டியவர்.

## இருதரப்புக்கும் கேடு

# ரஷ்யாவும் உக்ரைனும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, பரஸ்பர விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும்





ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கி நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகியுள்ள நிலையில், கிரெம்ளினுக்குப் போரின் விலையை அதிகரிக்க உக்ரைன் வழிகளைக் கண்டறிந்துள்ளது. ட்ரோன்கள் (ஆளில்லா விமானங்கள்) மூலம் அதன் எரிசக்தி உள்கட்டமைப்பைத் தாக்குவது மற்றும் கிரிமியா மீது ட்ரோன் முற்றுகையை செய்வது ஆகியவையே அவை.

2022 பெப்ரவரியில் போர் தொடங்கிய போது, உக்ரைனின் உடனடிப் பதில், ரஷ்யாவின் போர்க்கள முன்னேற்றங்களை எதிர்ப்பதும், அதே நேரத்தில் சர்வதேச ஆதரவைத் திரட்டுவதுமாக இருந்தது. போர் நீடித்ததால், உக்ரைன் அதன் மேற்கத்திய கூட்டாளிகளிடமிருந்து மேம்பட்ட தற்காப்பு மற்றும் தாக்குதல் ஆயுதங்களைப் பெற்றது, அதே நேரத்தில் ரஷ்யா கடுமையான பொருளாதாரத் தடைகளுக்கு உள்ளானது.

ஆனால் இந்த அணுகுமுறை ரஷ்யாவை மென்மையான போக்கை கடைப்பிடிக்கச் செய்யவில்லை. அது தனது முன்னரங்கப் படைகளை வலுப்படுத்தி, மேலும் பல உக்ரைனியப் பகுதிகளைக் கைப்பற்றியது.

இருதரப்பிலும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். உக்ரைனின் பொருளாதாரம் மேற்கத்திய உதவிகளை பெரிதும் நம்பியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ரஷ்யப் படைகள் மற்றும் முக்கிய உள்கட்டமைப்புகள் மீது தினமும் நூற்றுக்கணக்கான ட்ரோன்களை ஏவுவதன் மூலம் உக்ரைன் போர் முறையையே மாற்றியமைத்துள்ளது. போரின் விளைவுகளிலிருந்து ரஷ்யப் பொது மக்களை ஆரம்பத்தில் பாதுகாக்க முயன்ற ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு, இந்தத் தாக்குதல்கள் போர் இப்போது தங்கள் சொந்த வீட்டுக்கே வந்துவிட்டது என்பதை அப்பட்டமாக நினைவூட்டுகின்றன.

உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கியால் “தொலைதூர இலக்குகள்” என்று விவரிக்கப்படும் ரஷ்ய எண்ணெய் ஆலைகள் மீதான தாக்குதல்கள், ரஷ்யாவின் சுத்திகரிப்பு திறனின் ஒரு பகுதியை முடக்கியுள்ளன. 2014ஆம் ஆண்டில் ரஷ்யா தன்னோடு இணைத்துக் கொண்ட கருங்கடல் தீபகற்பமான கிரிமியாவின் மின்சார உள்கட்டமைப்பு மற்றும் எரிபொருள் விநியோகங்களையும் உக்ரைன் இலக்காகக் கொண்டு, தாக்குதல்களை நடத்தி அங்கு அவசர நிலையை பிரகடனம் செய்ய நிர்ப்பந்தித்திருக்கிறது.

ஜெலென்ஸ்கி இந்தத் தாக்குதல் அழுத்தத்தைப் பயன்படுத்தி, புட்டினை பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைத்து, போர்நிறுத்தத்தைப் பெற விரும்புகிறார். ஆனால் ட்ரோன் போர்முறை ரஷ்யாவின் முன்னேற்றங்களை மட்டுமே மெதுவாக்கியுள்ளது. கடந்த வாரம், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கிழக்கு நகரமான கொஸ்தியாந்தினிவ்காவைக் கைப்பற்றியதாகவும் லைமனை நோக்கி நெருங்கி வருவதாகவும் அறிவித்தது. 2014 முதல் உக்ரைனின் 20 சதவீதத்துக்கும் அதிகமான பகுதியை ரஷ்யா இப்போது தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

**ஜெலென்ஸ்கி இந்தத் தாக்குதல் அழுத்தத்தைப் பயன்படுத்தி, புட்டினை பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைத்து, போர்நிறுத்தத்தைப் பெற விரும்புகிறார். ஆனால் ட்ரோன் போர்முறை ரஷ்யாவின் முன்னேற்றங்களை மட்டுமே மெதுவாக்கியுள்ளது. கடந்த வாரம், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கிழக்கு நகரமான கொஸ்தியாந்தினிவ்காவைக் கைப்பற்றியதாகவும் லைமனை நோக்கி நெருங்கி வருவதாகவும் அறிவித்தது. 2014 முதல் உக்ரைனின் 20 சதவீதத்துக்கும் அதிகமான பகுதியை ரஷ்யா இப்போது தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.**

உக்ரைன் தனது நாட்டின் ஆழப்பகுதிக்குள் தாக்குதல் நடத்துவதற்கு நேட்டோ நாடுகள் வழிவகை செய்வதாக ரஷ்யா பலமுறை குற்றம் சாட்டியுள்ளது. ஒரு தீர்க்கமான வெற்றியைப் பெற முடியாததால் புட்டின் ஏற்கனவே நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார், மேலும் நேட்டோ மீதான அழுத்தத்தை அதிகரிக்க மோதலை விரிவுபடுத்துமாறு தேசியவாதக் குரல்கள் அவரை வற்புறுத்துகின்றன.

அரசியல் தீர்வு ஏதும் கண்ணுக்குத் தெரியாத நிலையில் சூழ்நிலை தொடர்ந்து மிகவும் கொந்தளிப்பாகவே உள்ளது. உக்ரைன் ரஷ்யாவைப் பொருளாதார ரீதியாகப் பாதிக்கலாம், ஆனால் போர்க்களத்தில் அது தொடர்ந்து நிலங்களை இழந்து வருகிறது. ரஷ்யா உக்ரைனுக்கு இராணுவ ரீதியான இழப்புகளை ஏற்படுத்தலாம், ஆனால் அதுவும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பார்த்திராத அளவிலான தாக்குதல்களை எதிர்கொள்கிறது.

இருதரப்பிலும் தங்களது இலக்குகளை அடைவதற்கான சாத்தியமான இராணுவப் பாதை இல்லை. புட்டினும் செலென்ஸ்கியும் பரஸ்பர விட்டுக் கொடுப்புகளுடன் கூடிய இணக்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அவர்கள் ஒரு போர்நிறுத்தத்திற்கு உடன்பட வேண்டும், மேலும் இரு நாடுகளின் பாதுகாப்பு கவலைகள் மற்றும் நேட்டோவின் எதிர்காலம் உள்ளிட்ட நிலுவையில் உள்ள பிரச்சினைகள் குறித்து அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளைத் தொடங்கத் தயாராக இருக்க வேண்டும்.

**(தி இந்து ஆசிரிய தலையங்கம், 7 ஜூலை 2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூலை - 11 சனிக்கிழமை
பராபவ வருடம் - ஆனி 27
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவாதசி




**மேடம்** கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**இடபம்** கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**மிதுனம்** திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் மோதல்கள் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். புகழ் கவுரவம் உயரும் நாள்.

**சிம்மம்** பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் ஆதரவுக் கிடைக்கும்.

**கன்னி** கடந்த இரண்டு நாட்களாக இருக்க அலைச்சல் டென்ஷன் குறையும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**துலாம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்** சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மகரம்** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி, வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும்.

**கும்பம்** அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பழைய கடனைத் தீர்க்க புது வழி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்** சொத்து பிரச்னைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் முக்கிய ஆலோசனை தருவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

# நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 31ஆம் ஆண்டு நினைவு



யாழ்ப்பாணம், ஜூலை. 11

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்றது.

சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி சிறீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம் பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல், விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்றைய காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.

இக் குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (அ)

# வடக்கு மாகாண குத்துச்சண்டை போட்டி வவுனியாவில் ஆரம்பம்



வவுனியா, ஜூலை. 11

வவுனியாவில் நேற்று முன்தினம் முதல் வடக்கு மாகாண குத்துச்சண்டைப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

வவுனியா பழைய பஸ் நிலைய வளாகத்தில் ஆரம்பமான இப் போட்டிகள், இன்று வரை நடைபெறவுள்ளன.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும், மாவட்ட குத்துச்சண்டைச் சங்கத்தின் தலைவரும் குத்துச்சண்டை பயிற்சியாளருமான நிக்ஸன் ரூபராஜ் ஒழுங்கமைப்பிலும் நடைபெறும் இப் போட்டித் தொடரில், வடமாகாணத்தின் 5 மாவட்டங்களைச் சேர்ந்த 90 குத்துச்சண்டை வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

போட்டியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ம. சுபர்ஜா கலந்துகொண்டார்.

அத்துடன், ஒமேகா ஆடைத் தொழிற்சாலையின் மனிதவள முகாமையாளர் அன்ரன் மதன் ராஜ், மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர், வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பலர் நிகழ்வில் பங்கேற்றனர். (அ)

# நீதம் சட்ட இதழ் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை. 11

யாழ்.பல்கலைக்கழக சட்டத் துறை மற்றும் யாழ்.பல்கலைக் கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுக்கும் நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட கூவர் அரங்கில் இன்று காலை 9.30 மணியளவில் இதழ் வெளியீடு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் சம்பத் அபயக்கோன் பிரதம விருந்தினராகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் கௌரவ விருந்தினராகவும், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்கவுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும் நீதம் இதழ் வெளியிடப்பட்டு வருவதுடன் இம்முறை அது பத்தாவது தடவையாக வெளியிடப்படவுள்ளது. (அ)

# புதுக்குடியிருப்பில் நேற்று டெங்கு ஒழிப்பு சிரமதானம்

முல்லைத்தீவு, ஜூலை. 11

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் டெங்கு ஒழிப்பு மற்றும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையை குறைப்பதை நோக்கமாக கொண்டு மாபெரும் சிரமதான மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டம் நேற்று காலை 7.45 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பிரதான வாயிலில் இருந்து ஆரம்பமான இந்நிகழ்வு, புதுக்குடியிருப்பு நகரம் வரை முன்னெடுக்கப்பட்டதுடன், பொதுமக்கள் மத்தியில் டெங்கு பரவலைத் தடுப்பதன் அவசியம் மற்றும் பிளாஸ்டிக், பொலித்தீன் பயன்பாட்டை குறைப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் புதுக்குடியிருப்பு பிரிவு, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மற்றும் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தன.

இதன்போது புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ப.சத்தியரூபன், சுகாதார பரிசோதகர்கள், பாடசாலையின் அதிபர் நேவிட் ஜீவராசா, ஆசிரியர்கள், மாணவர்கள், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், சுகாதாரப் பிரிவினர் இணைந்து சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தல் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறை மாற்றப்பட்டுள்ள கைதிகள் சித்திரவதை செய்யப்படவில்லை!

## மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 11

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல்சம்பவத்தைத் தொடர்ந்து, ஏனைய சிறைச்சாலைகளுக்கு உத்தியோகபூர்வமாக மாற்றப்பட்ட கைதிகள் எவரும் சித்திரவதைகளுக்கு அல்லது மோசமான நடத்தைகளுக்கு ஆளாக்கப்படவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

மாற்றப்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகளுக்கு நேரில் சென்று இதுவரை நடத்தப்பட்ட உத்தியோகபூர்வ கள ஆய்வுகளின் அடிப்படையில், கைதிகள் துன்புறுத்தப்பட்டதற்கான எவ்வித சான்றுகளும் கண்டறியப்படவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா உத்தியோகபூர்வமாக பிரகடனம் செய்துள்ளார்.

நீர்கொழும்பிலிருந்து கைதிகள் மாற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பூஸ்ஸ, அங்குனகொலபெலஸ மற்றும் வெலிக்கடை ஆகிய அதிஉயர் பாதுகாப்புச் சிறைச்சாலைகளுக்கு ஆணைக்குழுவின் விசேட அதிகாரிகள் குழுவினர் நேரில் சென்று கைதிகளின் தற்போதைய நிலவரங்களை உன்னிப்பாகக் கண்காணித்துள்ளனர்.

அத்துடன், மோதலின்போது காயமடைந்து தற்பொழுது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் கைதிகளையும் நேரில் சந்தித்து, அவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புப் பிரச்னைகள் குறித்துக் கலந்துரையாடியுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஏனைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சிய கைதிகளின் மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு நிலவரங்களை உறுதி செய்வதற்கான விசேட சோதனைக் களப்பணிகள் அடுத்த சில நாள்களுக்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருள் பரிசோதனையில் 239 சாரதிகள், நடத்துநர்கள் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை. 11

மேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நடமாடும் போதைப்பொருள் பரிசோதனை திட்டத்தின் கீழ் இதுவரை 239 பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் தடை செய்யப்பட்ட போதைப்பொருள் பயன்படுத்தியதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் கிளிபோர்ட் பெரேரா, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 5,242 சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், போதைப்பொருள் பயன்படுத்தியது உறுதியானவர்கள் சட்டநடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

போதைப்பொருள் பயன்படுத்தி வாகனம் செலுத்துவது சாலை விபத்துகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், பொதுப் போக்குவரத்து சாரதிகள் போதைப்பொருள் தாக்கமின்றி வாகனம் இயக்குவது கட்டாயம் என வலியுறுத்தினார்.

மேலும், இந்த நடமாடும் போதைப்பொருள் பரிசோதனைத் திட்டம் இந்த ஆண்டின் இறுதிக்குள் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும், பொதுப் போக்குவரத்து பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் பரிசோதனைகளின் எண்ணிக்கையும் இரட்டிப்பாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# சாலேயின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக மனைவி முறையீடு

கொழும்பு, ஜூலை. 11

கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வரும் தனது கணவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, அவரது சட்டத்தரணியுடன் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளை முன்னெடுப்பதைக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தடுத்து நிறுத்தியுள்ளதன் மூலம் அவரது அடிப்படை மனித உரிமைகள் உத்தியோகபூர்வமாக மீறப்பட்டுள்ளதாகக் கூறி, அவரது மனைவி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மற்றுமொரு அவசர முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலே சார்பாக முன்னிலையாகும் ஜனாதிபதி சட்டத்தரணி அசித் சிறிவர்தன, வாரத்துக்கு ஒருமுறை மாத்திரமே சுமார் 20 நிமிடங்கள் தன்னுடனான ஆலோசனைகளுக்கு அனுமதிக்கப்பட்டு வரும் பின்னணியில், கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற சந்திப்பின்போது உயர் அதிகாரிகளின் நேரடிக் கட்டளைகளுக்கு அமைவாகத் தங்களால் தனிப்பட்ட சந்திப்புகளுக்கு அனுமதிக்க முடியாது எனக் கூறி சி.ஐ.டி. அதிகாரிகள் மனிதாபிமானமற்ற முறையில் அருகில் நின்றுகொண்டு இரகசியக் கலந்துரையாடலைத் தடுத்துள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவரது மனைவி குற்றம் சாட்டியுள்ளார். (அ)




# சிறைச்சாலை கலவரத்தின்போது துப்பாக்கி பயன்படுத்தப்பட்டமை பொறுப்பற்ற செயல்!

## வசந்த முதலிகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 11

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதலின் போது, சிறைச்சாலை அதிகாரி ஒருவர் துப்பாக்கியைப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டுள்ளதாக மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த முதலிகே குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

அந்த அதிகாரி தனது துப்பாக்கியைப் பயன்படுத்தியமை அரசாங்கத்தின் முறையான தீர்மானத்தின் படியா அல்லது அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ உத்தரவின் படியா என்ற சந்தேகம் எழுகிறது.

அந்தச் சூழலைச் சமாளிக்க அவர் தானாக எடுத்த நடவடிக்கையாகவே இது தென்படுகிறது.

இவ்வாறான பதற்றமான சூழ்நிலைகளில் அரசாங்கம் எந்தவொரு ஆக்கபூர்வமான தலையீட்டையும் செய்யாமல், பொறுப்பற்ற முறையில் ஒதுங்கிக் கொள்கிறது. எது வேண்டுமானாலும் நடக்கட்டும்" என்ற ரீதியில் அரசாங்கம் செயற்படுகிறது-என்றார்.

# சுற்றுலா பயணிகள் வருகை 12 இலட்சத்தைத் தாண்டியது

கொழும்பு, ஜூலை. 11

2026 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்துள்ள ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்தை தாண்டியுள்ளதாக சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே பிரதி அமைச்சர் இதனைப் பகிர்ந்து கொண்டார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தை இலங்கையினால் ஈட்ட முடிந்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள இந்த சாதகமான வளர்ச்சியை அடுத்து, 2026 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகை என்ற இலக்கை வெற்றிகரமாக அடைய முடியும் என்றும் பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கதிர்காமம் பக்தர்களுக்கான காட்டுப் பாதை நேற்று திறப்பு

## 24 ஆம் திகதி வரை பயணிக்க அனுமதி



அம்பாறை, ஜூலை. 11

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடி வேல் விழாவை முன்னிட்டு, பாதயாத்திரையில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் பயன்பாட்டுக்காக உகந்தை வழியூடான காட்டுப் பாதை நேற்று வெள்ளிக்கிழமை காலை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வனப்பகுதியூடாகக் கதிர்காமத்தை நோக்கிப் பயணிக்கும் இந்த விசேட காட்டுப் பாதை, நேற்று முதல் வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 14 நாள்களுக்கு பக்தர்களின் பயன்பாட்டுக்காகத் திறந்திருக்கும் எனத் தொல்பொருள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

காடுகளின் இயற்கைச் சமநிலையைப் பாதுகாக்கும் பொருட்டு, காட்டுப் பாதையூடாகப் பயணிக்கும் பக்தர்கள் எவரும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்களை வனப்பகுதிக்குள் வீசி எறியக்கூடாது எனக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

காட்டுப் பாதையூடாகப் பயணிக்கும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் குடிதண்ணீர், மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்காக விசேட பாதுகாப்புப் படையினரும், சுகாதாரத்துறையினரும், சிவில் அமைப்புகளும் இணைந்து விசேட சாவடிகளை அமைத்துள்ளனர்.

பாரம்பரியமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து மாதக்கணக்கில் கால்நடையாகப் பயணித்து உகந்தையை வந்தடைந்துள்ள நூற்றுக்கணக்கான பக்தர்கள், நேற்று காலை காட்டுப் பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரோகரா கோஷங்களுடன் வனப்பகுதிக்குள் தமது புனிதப் பயணத்தைத் தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கதிர்காம யாத்திரீகர்களுக்கு இலவச மருத்துவ முகாம்

அம்பாறை, ஜூலை. 11

கதிர்காம யாத்திரீர்களுக்காக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் முற்றிலும் இலவச மருத்துவ முகாமை இவ்வருடமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தெரிவித்தார்.

இந்த மருத்துவ முகாம் குமண சரணாலயத்தில் இரு இடங்களில், கிணத்தடி மற்றும் வங்குறாவெளியில் நேற்று தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இலவச மருத்துவ முகாமில், உபாதைகளுக்கான ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை, வலி, சோர்வு, தசை பிடிப்பு, முட்டு வலி, தடிப்பு போன்றவற்றிற்கான சிகிச்சையுடன் ஆயுர்வேத மருந்துகள் வழங்குதல் மற்றும் இயற்கை மருத்துவ ஆலோசனைகள் மற்றும் அவசர நிலைகளிற்கான முதலுதவி சேவைகள் போன்ற சேவைகளை வழங்கி வைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# மட்டக்களப்பு ஆரையம்பதி வாள்வெட்டுச் சம்பவம் தலைமறைவாக இருந்த இருவர் வாள்களுடன் கைது!

மட்டக்களப்பு, ஜூலை. 11

மட்டக்களப்பு ஆரையம்பதி வம்மிக்கேணி மாரியம்மன் ஆலய முன்றலில் கடந்த மாதம் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக தலைமறைவாகல் இருந்த இருவரை மூன்று வாள்களுடன் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 26 மற்றும் 19 வயதுடைய இரு இளைஞர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 29ஆம் திகதி ஆரையம்பதி வம்மிக்கேணி மாரியம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். தாக்குதலை மேற்கொண்டவர்கள் சம்பவத்துக்குப் பின்னர் தலைமறைவாகியிருந்தனர்.


இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வந்த காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் போதை ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள், கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டை சுற்றிவளைத்து இருவரையும் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து மூன்று வாள்களையும் மீட்டுள்ளனர்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில், கைது செய்யப்பட்டவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குழுவினர் மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் சுற்றித்திரிந்து பொதுமக்களை அச்சுறுத்தியதுடன், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல்வேறு வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவங்களுடனும் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரையம்பதி மகாவித்தியாலய மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவத்துடனும் இக்குழுவினருக்கு தொடர்பு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# ஆசிய நாடுகளின் இராஜதந்திரிகள் திருக்கோணேஸ்வரத்தில் வழிபாடு



திருமலை, ஜூலை. 11

திருகோணமலைக்கு விஜயம் செய்த ஆசிய நாடுகளின் இராஜதந்திரிகள் நேற்று திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு சென்று விசேட வழிபாட்டில் ஈடுபட்டனர்.

மலேசியா, இந்தோனேசியா, மியன்மார், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுக் குழுவினர் குறித்த பூசை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதன்போது முக்கியமான திருகோணமலை சுற்றுலாத்துறை தொடர்பான விளக்கங்களை திருகோணமலை மாவட்ட ஹோட்டல் சங்கத்தின் தலைவர் குமார் ஜெயக்குமார் தெளிவூட்டினார்.

திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்த தூதுக்குழுவினர் சுற்றுலாத்துறை முதலீட்டு வாய்ப்புக்கள் மூலமான பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (அ)

# ஏழு வயதுச் சிறுவன் நீரில் மூழ்கி மரணம்!

மட்டக்களப்பு, ஜூலை. 11

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை - 4 ஹைராத் ஆற்றங்கரை பகுதியில் சிறுவன் ஒருவன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை - 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 07 வயதுடைய சிறுவன் ஒருவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்ப உறவினர்களுடன் ஆற்றங்கரைப் பகுதிக்குச் சென்றபோது சிறுவன் வழி தவறிச் சென்றுள்ளார்.

காணாமற்போன சிறுவனை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்த நிலையில் சிறுவன் ஆற்றில் நீரில் மூழ்கிய நிலையில் உயிரிழந்து காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட சிறுவனின் உடல் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் வாழைச்சேனை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# காத்தான்குடி நகர சபை உறுப்பினர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் கைது!

மட்டக்களப்பு, ஜூலை. 11

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் காத்தான்குடி நகர சபைக்கு தேசிய பட்டியல் ஊடாக உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள நகர சபை உறுப்பினர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

காத்தான்குடி நகர சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் குறித்த உறுப்பினர், காத்தான்குடி கடற்கரைப் பகுதியில் தமக்கு சொந்தமான சுற்றுலாப் பயணிகள் விடுதியில் பணியாற்றி வந்த 21 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

விசாரணைகளுக்காக குறித்த நகர சபை உறுப்பினரை அழைத்த காத்தான்குடி பொலிஸார், ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# இடிந்து வீழ்ந்த மட்டக்களப்பு புதுப்பாலம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு!

மட்டக்களப்பு, ஜூலை. 11

மட்டக்களப்பு நகருக்குள் வரும் பிரதான பாலங்களில் ஒன்றாக உள்ள அண்மையில் இடிந்துவீழ்ந் புதுப்பாலம் தற்காலிக புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

பாலம் உடைந்து வீழ்ந்த நிலை யில் மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளு மன்ற உறுப்பினர் கந்திசாமி பிரபு, அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கவனத்துக்கு கொண்டுவந்ததை தொடர்ந்து உடனடியாக பெய்லி பாலம் ஒன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

தற்காலிக பாலத்தை அமைக்கும் பணிகளை வீதி அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்திருந்த நிலையில் பணிகள் நிறைவு பெற்று பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்டது.

வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் ந.கதீசன், நிறைவேற்று பணிப்பாளர் சு.கிருஸாந்தன் உட்பட பலர் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தற்காலிக பாலம் என்ற காரணத்தினால் குறித்த வீதியில் கனரக வாகனங்கள் பயணிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணத் தேர்தல் நிதியைப் பேரிடர் நிவாரணத்துக்கு பயன்படுத்தவில்லை

## சபையில் பிரதமர் ஹரிணி விளக்கம்

கொழும்பு, ஜூலை. 11

மாகாண சபை தேர்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, பேரிடர் நிவாரணப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், சேதமடைந்த உள்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைப்பதற்கும் கொடையாளர்களினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து நிதியுதவிகளும், தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் உள்ள சிறப்பு கணக்கு ஒன்றில் பாதுகாப்பாக வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிதி தேசிய முன்னுரிமைகள் மற்றும் தேவைகளைக் கருத்திற்கொண்டு அடையாளம் காணப்படும் திட்டங்களுக்காக, வெளிப்படைத்தன்மையுடனும் செயல்திறனுடனும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். (அ)

### நீர்கொழும்புச் சிறை...

கட்டமைப்பு ரீதியான பிரச்னைகளை அவசரமாகத் தீர்க்க வேண்டிய தேவையை மீண்டும் வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் கீழ் அதிகளவிலானோர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா., இவர்களில் பலர் சிறைத்தண்டனைக்கு பதிலாக சுகாதாரத்தை மையப்படுத்திய சிகிச்சை மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளால் பயனடைய வேண்டியவர்கள் என தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதாக இலங்கை அதிகாரிகள் அளித்துள்ள உறுதிமொழியை வரவேற்றுள்ள ஐ.நா., அந்த விசாரணைகள் துரிதமாகவும், சுயாதீனமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நீர்கொழும்பு சிறைச்சாலையையும், கைதிகள் மாற்றப்பட்டு சித்திரவதை மற்றும் பிற கொடூரமான நடத்தைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் அனைத்து தடுப்புக்காவல் நிலையங்களையும் எந்தத் தடையும் இன்றி பார்வையிட அனுமதி வழங்குமாறும் ஐ.நா. அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது. (அ)

### காணிகளை விடுவிக்குமாறு...

இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், அப்பகுதிகளில் இராணுவம் குடியேற்ற நடவடிக்கைகளிலும் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தமது வழிபாட்டுத் தலங்களான செபஸ்தியார் ஆலயம் மற்றும் காணிக்கை மாதா ஆலயங்களுக்கு சென்று வழிபடுவதற்கான அனுமதியும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கடந்த மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும், காணிகளை விடுவிப்பது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

36 ஆண்டுகளுக்கும் மேலாக தமது சொந்த நிலங்களில் வாழும் உரிமையை இழந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர்கள், காணி விடுவிப்பு தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடுகளில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் தெரிவித்தனர். மேலும், தேர்தல் காலத்தில் "மக்களின் காணிகள் மக்களுக்கே" என உறுதியளித்த அரசாங்கம், அந்த வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

மயிலிட்டி மக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், அவ்வாறு செய்யத் தவறினால் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தி, நிரந்தர போராட்டமாக முன்னெடுக்கவுள்ளதாக எச்சரித்தனர். (அ)

### உலகளாவிய எரிசக்த...

மெல்ல மீண்டு வந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள பதற்றம் அந்த நம்பிக்கையைச் சிதைத்துள்ளது.

உலகளாவிய மசகு எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு ஏற்றுமதியில் ஐந்தில் ஒரு பங்கைத் தன்வசம் கொண்டுள்ள "ஹோர்முஸ் நீரிணை" பகுதி, இந்த வார மோதல்களால் மீண்டும் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

இந்த மூலோபாய நீர்வழியின் மூடல் காரணமாக, உலக சந்தைக்கு வர வேண்டிய ஒரு நாளைக்கு 14 மில்லியன் பெரல் மசகு எண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, 2020 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக இந்த ஆண்டு உலகளாவிய மசகு எண்ணெய்க்கான தேவை மிகக் கடுமையான வீழ்ச்சியைச் சந்திக்கும் என்று சர்வதேச எரிசக்தி முகவரகத்தின் மாதாந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தற்போது சர்வதேச சந்தையில் பிரெண்ட் மசகு எண்ணெய் ஒரு பெரல் 76.37 டொலராக நிலைபெற்றுள்ள போதிலும், வரும் வாரங்களில் விநியோகத் பற்றாக்குறை காரணமாக இதன் விலை மேலும் உயரக்கூடும் எனப் பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

இதற்கிடையில், மோதலைத் தணித்து மீண்டும் தற்காலிகப் போர்நிறுத்தத்தைக் கொண்டுவரப் பாகிஸ்தான் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் தீவிரப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. பஹ்ரைன், குவைத் மற்றும் ஜோர்டான் போன்ற அண்டை நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளதால், பிராந்திய அமைதியைக் காக்க எகிப்து மற்றும் வளைகுடா நாடுகள் இருதரப்பையும் போரைக் கைவிடுமாறு வலியுறுத்தி வருகின்றன. (அ)

### நல்லூர் திருவிழாவுக்காக...

நல்லூர், மடு மற்றும் தலதா மாளிகை ஆகிய இடங்கள் பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் என மத வேறுபாடின்றி அனைவரும் வழிபட வேண்டிய மற்றும் பார்வையிட வேண்டிய புனித ஸ்தலங்களாகும்.

வடக்கிற்கான ரயில் பாதை முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. தற்போது ரயில்கள் மணிக்கு 100 முதல் 110 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும்.

சில குறைபாடுகள் இருந்தாலும் , திருவிழாக் காலத்தில் மக்களுக்கு தடையற்ற போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

### இலஞ்ச ஊழல்...

ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு எழுத்துபூர்வமான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

முந்தைய அரசாங்கத்தின் போது, சமிந்த குலரத்னவை பாராளுமன்றத்தின் பிரதி செயலாளர் நாயகமாக நியமிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஒரு உறுப்பினராக செயற்பட்டுள்ளார்.

அந்த நியமனம் தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கும், அது குறித்த மேலதிக தகவல்களைப் பெறுவதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போதைய அரசாங்கத்தின் கீழ் சமிந்த குலரத்னவின் சேவை இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### துப்பாக்கிச் சூடு...

குறித்த அதிகாரிக்கு தற்போது சில கைதிகள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து மரண அச்சுறுத்தல்கள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அவருடன் பணியாற்றும் சக அதிகாரிகள் அவருடன் இருப்பதாக சிறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சம்பவம் நடந்த நேரத்தில், அவர் நீர்கொழும்பு சிறையில் சிறைக்காவலராக பணியாற்றி வந்துள்ளார். இவர் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு சிறைத்துறையில் சேர்ந்துள்ளதுடன், பல சிறைகளிலும் பணியாற்றியுள்ளார்.

சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகளுடன் இணக்கமாக பழகும் அதிகாரியாக அவர் கருதப்படுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

### சிறைச்சாலை அதிகாரிகளிடம்...

வாக்குமூலம் பெறத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் இடம்பெற்ற போது அன்று பணியில் இருந்த சிறை அதிகாரிகளிடமிருந்தும் வாக்குமூலங்கள் பெறப்பட உள்ளன. இதனையடுத்து நீர்கொழும்பு சிறைக்கு வெளியே இருந்த மக்களிடமிருந்தும் வாக்குமூலங்கள் பெறப்பட உள்ளன.

கடந்த 5 மற்றும் 6ஆம் திகதிகளில் நீர்கொழும்பு சிறையில் நடந்த மோதல்களில் கைதிகளும், சிறை அதிகாரிகளும் உட்பட 29 பேர் உயிரிழந்துள்ளதுடன், இவர்களில் 8 சிறை அதிகாரிகளும் அடங்கியுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த சிறை அதிகாரிகளின் பிரேத பரிசோதனையில், அவர்கள் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. பிரேத பரிசோதனை அறிக்கைகளின்படி, தலையில் ஏற்பட்ட கடுமையான காயங்களால் அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொரு குழுவினர், கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் நீர்கொழும்பு மாவட்ட பொது மருத்துவமனையில் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

### நீர்கொழும்பு சிறைச்சாலைக்...

நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட 28 சடலங்களில் 24 சடலங்கள் மீதான பிரேத பரிசோதனைகளை, டாக்டர் சுஜீவ விக்ரமசிங்க தலைமையிலான ஐந்து பேர் கொண்ட சிரேஷ்ட சட்ட மருத்துவ அதிகாரிகளின் குழுவினர் மேற்கொண்டனர்.

இக்குழுவில் வைத்தியர் பிரசன்ன அப்புஹாமி, வைத்தியர் சமந்த விஜேரத்ன, வைத்தியர் சமிந்த ராஜபக்‌ஷ, வைத்தியர் ரமேஷ் அக்கியவன்ன ஆகியோர் இடம்பிடித்திருந்தனர்.

தடயவியல் சோதனைகளின்படி, உயிரிழந்த 24 பேரில் 14 பேரின் மரணத்துக்கு துப்பாக்கிச் சூட்டுக் காயமே காரணம் என்பதுடன், ஒன்பது பேர் பலத்த காயங்கள் காரணமாக உயிரிழந்துள்ளனர். மேலும் ஒரு மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நிலுவையில் உள்ளது.

பலத்த காயங்களால் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகள், கனமான பொருட்களால் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டதால் மரணத்தை விளைவிக்கக்கூடிய தலைக் காயங்களுக்கு ஆளானதாக தடயவியல் மருத்துவக் குழு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், சிறைச்சாலை உயிரிழப்புகள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் நேற்று முன் தினம் மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ந்தன. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைகள் நிறைவடைந்த 24 பலியானோரின் சடலங்கள் இறுதிச் சடங்குகளுக்காக குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன. எஞ்சிய நான்கு சடலங்கள் மீதான பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், பரிசோதனைக்காக காத்திருக்கும் சடலங்களில் ஒன்று இந்தியப் பிரஜையுடையது என்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நீர்கொழும்பு தலைமை நீதவான் ஷிலானி பெரேராவின் வழிகாட்டுதலின் கீழ் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எஞ்சிய பிரேத பரிசோதனை அறிக்கைகளை விரைவாக சமர்ப்பிக்குமாறு அவர் சட்ட மருத்துவக் குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிறைச்சாலை வன்முறைகள் மற்றும் மரணங்களுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் குறித்த விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கும் உத்தரவிட்டுள்ளார். (அ)

### நீதி அமைச்சருக்கு...

குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனையடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்றத்தில் வைத்து குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர். (அ)

### வடக்கில் இராணுவத்தை...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தியினால் கொண்டுவரப்பட்ட யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறை சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது: -

யாழ். மாவட்டத்தை சுற்றுலா பிரதேசத்தின் முக்கியமான மைய பிரதேசமாக மாற்றுவதாக இருந்தால் அதற்கான போக்குவரத்து ஸ்தானங்களை உறுதிப்படுத்த வேண்டும். இதில் முதலாவது பலாலி விமான நிலையம் முக்கியமானது. இந்தியா இதனை அபிவிருத்தி செய்ய தயாராக இருந்தாலும் முன்னைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் அந்த உதவியை பெற்றுக்கொள்ள தயங்குகின்றனர்.

மூன்று கட்டமாக அந்த விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இணங்கியிருந்தது. அதில் ஓடுபாதை அபிவிருத்தியை செய்ய வேண்டும். பிராந்திய விமானங்கள் வந்து இறங்கக்கூடியவாறு இருக்க வேண்டும். அப்படியென்றால் சிங்கப்பூர், டுபாய் போன்ற இடங்களில் இருந்து விமானங்களை இறக்கக்கூடியதாக இருக்கும்.

இந்தியா இலவசமாக அதற்கான உதவியை வழங்க முன்வந்த போதும் அதனை அனுபவிக்காமல் இருப்பது துரதிஸ்டவசமானது. இதன்படி அதனை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதேவேளை புலம்பெயர் தமிழ் மக்கள் சுற்றுலாப் பயணிகளாக வருவதற்கு ஆர்வமாக இருக்கின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் அவர்கள் வர தயாராக இருக்கின்றனர். இதற்காக முதலாவதாக அங்கு இராணுவ பிரசன்னத்தை குறைக்க வேண்டும்.

இராணுவ எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அவ்வாறு கனிசமான மாற்றம் ஏற்பட்டால் எமது மண்ணை சார்ந்த மக்களே யாழ்ப்பாணத்திற்கு வந்து முதலீடுகளை செய்து பொருளாதார இருப்புகளை முன்னேற்றலாம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# சிறுநீரக கல் அகற்றும் சிகிச்சைக்காக காத்திருக்கும் 5 ஆயிரம் நோயாளிகள்!

## சுகாதார அதிகாரிகள் தகவல்

கொழும்பு, ஜூலை. 11

இலங்கையில் சிகிச்சைக்கான அதிக தேவை மற்றும் சுகாதார வசதிகளில் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக, தற்போது 5,000 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிறுநீரகக் கல் அகற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்காக காத்திருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


அதிகரித்து வரும் இந்த நிலுவையிலுள்ள சிகிச்சைகளுக்கு தீர்வு காண்பதற்காக, மீரிகம தேசிய சிறுநீரகக் கல் சிகிச்சை மையமானது, சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸவினால் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த புதிய வசதியானது, நாடளாவிய ரீதியில் உள்ள சிறுநீரகக் கல் நோயாளிகளுக்கு சேவைகளை வழங்கக்கூடிய ஒரு விசேட மையமாக திட்டமிடப்பட்டுள்ளதுடன், அறுவை சிகிச்சைகளுக்கான நீண்ட காத்திருப்புப் பட்டியலைக் குறைக்க உதவும்.

இலங்கையில் பதிவாகும் மிகவும் பொதுவான சுகாதார நிலைமைகளில் சிறுநீரகக் கல் நோயும் ஒன்றாகும், இதில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது.

தற்போது நாடு முழுவதும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆலோசனை நிபுணர்களுடன் 30 இற்கும் மேற்பட்ட விசேட சிறுநீரக பிரிவுகள் இயங்கி வந்தபோதிலும், வரையறுக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், அறுவை சிகிச்சை கூடங்களின் பற்றாக்குறை மற்றும் மேம்பட்ட எண்டோயூரோலஜிக்கல் தொழில்நுட்பத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் உள்ளிட்ட தடைகள் காரணமாக சிகிச்சைக்கான தேவை தொடர்ந்து அதிகமாகவே உள்ளது. (அ)

# ஒட்டிப் பிறந்தவர்களைப் பிரித்து இலங்கை மருத்துவர்கள் சாதனை



கொழும்பு, ஜூலை. 11

ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள், ஐந்து வருடங்களுக்கு பின்னர் வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அறுவைச் சிகிச்சை பேராதெனியவில் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் மருத்துவ வரலாற்றில் ஒரு பெரும் சாதனையாக, இது பாராட்டப்பட்டுள்ளது.

பேராதனை போதனா மருத்துவமனை, சிறிமாவோ பண்டாரநாயக்க சிறப்பு குழந்தைகள் மருத்துவமனை மற்றும் பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் குழு, கடந்த ஜூன் 10ஆம் திகதி மிகவும் சிக்கலான அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டனர்.

இதன்போது, ஒட்டிப் பிறந்த இரட்டையர்களான வினுலி தருல்யா மற்றும் வித்துலி மனுல்யாவை வெற்றிகரமாக, அவர்கள் பிரித்தனர்.

மாவனெல்ல, அரநாயக்கவில் 2021 இல் பிறந்த இந்த இரட்டையர்கள், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிபுணர்களின் நெருங்கிய கண்காணிப்பில் இருந்து வந்தனர்.

இந்தக் காலகட்டத்தில், மருத்துவக் குழுக்கள் இறுதிப் பிரிப்பு அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்கு முன்பு, விரிவான ஆய்வுகள், திட்டமிடல் மற்றும் பல நடைமுறைகளை மேற்கொண்டன.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் சிக்கலான குழந்தை மருத்துவ நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்படும் இந்த அறுவைச் சிகிச்சையின் விளைவாக, அந்த இரட்டையர்கள் இரண்டு தனித்தனி குழந்தைகளாக வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டனர். இந்தச் சாதனை, இலங்கை மருத்துவ நிபுணர்களின் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் நிபுணத்துவத்திற்காக பாரா ட்டுகளைப் பெற்றுள்ளது. (அ)

# ராஜிதவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை!

கொழும்பு, ஜூலை. 11

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தை கொரிய நிறுவனமொன்றுக்கு வழங்கியதன் மூலம் அரசுக்கு 20 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியதாக தொடரப்பட்ட ஊழல் வழக்கில், விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு, கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளது.

இந்த வழக்கின் சந்தேகநபர்களான முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே ஆகியோருக்கு எதிரான விசாரணைகள் முழுமையாக நிறைவடைந்துள்ளதாக இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது.

விசாரணைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இந்த வழக்கிற்கான குற்றப் பகிர்வு பத்திரங்களை விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சார்பில் முன்னிலையான அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கின் இரண்டு பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

இந்த வழக்கின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 04-ஆம் திகதி பரிசீலிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# இளைஞர் கடத்தப்பட்டு சித்திரவதை; யாழில் 5 பேர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை. 11

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஐந்து பேரை, இரண்டு கூரிய வாள்கள் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து, யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானதாக சந்தேகிக்கப்படும் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் விசாரணைகளின்படி, கடந்த 5 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் இளைஞர் ஒருவர் ஐந்து பேர் கொண்ட குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். பின்னர் அவரை கைதடிப் பகுதிக்கு அழைத்துச் சென்று, உடைகளை அகற்றி சித்திரவதை செய்ததுடன், காயமடைந்த நிலையில் யாழ்.பொஸ்கோ பாடசாலை அருகே கொண்டு வந்து விட்டுச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, குறித்த கார் வீதிச் சோதனையில் பொலிஸாரின் சமிக்ஞையை மீறி நிறுத்தாமல் வேகமாகச் சென்றுள்ளது. இதனால் சந்தேகமடைந்த பொலிஸார் காரை துரத்திச் சென்று இடைமறித்து சோதனை மேற்கொண்டனர்.

சோதனையின்போது காரிலிருந்து இரண்டு கூரிய வாள்கள் கைப்பற்றப்பட்டதுடன், காரின் கதவுகள் மற்றும் ஆசனங்களில் இரத்தக்கறைகள் காணப்பட்டதாகவும், இரத்தக்கறை படிந்த ஒரு சட்டையும் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 2.5 கிராம் "ஐஸ்" போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கடத்தப்பட்ட இளைஞர் பொலிஸாரால் கண்டறியப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் மேற்பார்வையில் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சவற்காரத்துக்குள் மறைத்து யாழில் ஹெரோயின் கடத்திய ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை. 11

வாசனை சவற்காரத்துக்குள் ஹெரோயின் மறைத்து, யாழ்ப்பாண நகர்புறப் பகுதியில் விற்பனைக்காக எடுத்துச் சென்றதாகக் கூறப்படும் நபர் ஒருவர், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை இரகசியமான முறையில் நடைபெறுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து முன்னெடுத்த விசேட நடவடிக்கையின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் உடுவில் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, பொதிகள் சேவை ஊடாக வரவழைக்கப்பட்ட வாசனை சவற்காரத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர், 2023 ஆம் ஆண்டிலும் இதே போன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கடந்த மாதமும் சிறியளவிலான போதைப்பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு;

# யாழ். நகரப் பகுதியிலிருந்து அகற்றப்பட்டனர் யாசகர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை. 11

யாழ்ப்பாண நகரில் சுற்றுலாப் பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும், 30 இற்கும் மேற்பட்ட யாசகர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகள், யாழ்ப்பாண பொலிஸாரின் விசேட நடவடிக்கையின் மூலம் அகற்றப்பட்டனர்.

யாழ்ப்பாண நகரின் சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலா நட்பான சூழலை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக, வடமாகாண சுற்றுலாத்துறை தலைவர் வைத்தியர் விவேகானந்தராஜா தெரிவித்துள்ளார்.

அவரது விளக்கத்தின்படி, யாழ்ப்பாணக் கோட்டைச் சுற்றுவட்டாரம், பஸ் நிலையம், கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை சுற்றுவட்டாரம் உள்ளிட்ட பகுதிகளில், யாசகம் என்ற பெயரில் சுற்றுலாப் பயணிகளுக்கும் வியாபார நிலையங்களுக்கும் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாக தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இதனையடுத்து, யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டதுடன், யாழ்ப்பாண மாநகர சபையின் ஒத்துழைப்புடனும் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது, வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட யாசகர்கள் மற்றும் தெருவோர வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களது விவரங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு லிமிடெட் நிறுவனத்தினரால் 11.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org